

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற இந்திய கேம் டெவலப்பர்ஸ் சங்கம் (Game Developers Association of India) மற்றும் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை (ELCOT) இணைந்து நடத்தும் 17ஆவது இந்திய கேம் டெவலப்பர்ஸ் 2025 (IGDC 2025) மாநாட்டில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (6.11.2025) தமிழ்நாடு அரசின் எல்காட் நிறுவனத்திற்கும் லக்சயா டிஜிட்டல் நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், எல்காட் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கா.ப.கார்த்திகேயன், இந்திய கேம் டெவலப்பர்ஸ் சங்கத்தின் நிர்வாகி ஸ்ரீதர் முப்பிடி, லக்சயா டிஜிட்டல் நிறுவனத்தின் மன்வேந்ரா சுக்குல் ஆகியோர் உடனிருந்தனர்.





தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.11.2025) சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற இந்திய கேம் டெவலப்பர்ஸ் சங்கம் மற்றும் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை இணைந்து நடத்தும் 17ஆவது இந்திய கேம் டெவலப்பர்ஸ் 2025 மாநாட்டினை பார்வையிட்டார். இந்நிகழ்வில் அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்னித், எல்காட் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கா.ப.கார்த்திகேயன், இந்திய கேம் டெவலப்பர்ஸ் சங்கத்தின் நிர்வாகிகள் ஸ்ரீதர் முப்பிடி, மன்வேந்ரா சுக்குல் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### காஞ்சிபுரம் – வரதராஜப்பெருமாள் கோவிலில்

# தங்கப் பல்லி பக்தர்களின் தரிசனத்திற்காக அமைக்கப்பட்டுள்ளது!

## ஊடகங்களில் வந்த செய்திக்கு – இந்து சமய அறநிலையத்துறை விளக்க அறிக்கை!

காஞ்சிபுரம், நவ.7-

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம், தேவராஜசுவாமி திருக்கோயிலில் (வரதராஜப் பெருமாள்) தங்கப் பல்லி மாயமானதாகவும், கோயிலில் உள்ள தங்கம், வெள்ளியிலான பல்லி சிலைகளை கோவில் நிர்வாகம் மாற்ற முயற்சிப்பதாக ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த ரங்கராஜ நரசிம்மன் என்பவரின் புகார் அடிப்படையில் சிலை கடத்தல் தடுப்பு பிரிவால் விசாரணை செய்து வருவதாக ஊடகங்களில் வெளியான செய்திக்கான விளக்கம் வருமாறு:-

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் நகர், தேவராஜசுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத்துறை சட்டப்பிரிவு 46(3)ன் கீழ் விளம்புகை செய்யப்பட்ட முதுநிலை திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் வரதராஜப் பெருமாள் திருக்கோயில் என்றும், அத்திவரதர் திருக்கோயில் என்றும் மக்களால் அழைக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயில் நிர்வாகம் செங்கல்பட்டு உதவி ஆணையரால் உதவி ஆணையர்/நிர்வாக அறங்காவலர் என்ற நிலையில் கூடுதல் பொறுப்பாக கவனிக்கப்பட்டு வருகிறது.

இத்திருக்கோயிலில் வெள்ளியிலான சிறிய பல்லியும், தங்க பல்லி என்று அழைக்கப்படும் பித்தளையாலான பெரிய பல்லியும் உள்ள நிலையில், திருக்கோயிலில் வரதராஜப் பெருமாளை தரிசனம் செய்து விட்டு வரும் வயதான மற்றும் சிறிய வயது பக்தர்களால் உயரே அமைக்கப்பட்டிருந்த பல்லியைத் தொட்டு வணங்குவது சிரமமாக இருந்ததன் காரணமாக பக்தர்கள் நலன் கருதி இந்து சமய அறநிலையத்துறை சட்ட விதிகளுக்குட்பட்டு திருவாளர்கள் L & T நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு நிதியின் (CSR Fund) மூலம் ரூ.76.90 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்து பணிகள் தொடங்கப்பட இருந்த நிலையில் இப்பணிகளுக்கு தடை கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, அவ்வழக்கில் பக்தர்கள் நலன் சார்ந்த பணி என்பதால் திருக்கோயிலுக்கு சாதகமாக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்நிலையில், தேவராஜசுவாமி திருக்கோயிலில் (வரதராஜப் பெருமாள்) தங்கபல்லி மாயமானதாகவும், திருக்கோயிலில் உள்ள தங்கம், வெள்ளியிலான பல்லி சிலைகளை திருக்கோயில் நிர்வாகம் மாற்ற முயற்சிப்பதாக ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த ரங்கராஜ நரசிம்மன் என்பவர் அளித்த புகாரின் அடிப்படையில் சிலை கடத்தல் தடுப்பு பிரிவால் 05.11.2025 அன்று திருக்கோயிலின் உதவி ஆணையர்/நிர்வாக அறங்காவலரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

மேற்படி புகாரின் மீது நடத்தப்பட்ட விசாரணையில், அனைத்து பணிகளும் துறையின் அனுமதி பெற்றே நடைபெறுகிறது என்றும், திருக்கோயில் தரப்பில் உரிய ஆவணங்கள் அளிக்கப்பட்டது என்றும் திருக்கோயில் உதவி ஆணையர்/நிர்வாக அறங்காவலர் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில், மண்டல இணை ஆணையரால் திருக்கோயில் நேரில் ஆய்வு செய்யப்பட்டதன் அடிப்படையிலும், கைவசமுள்ள ஆவணங்களையும் கவனமுடன் பரிசீலனை செய்ததிலும் ரங்கராஜன் நரசிம்மன் என்பவரால் சிலைத் திருட்டு தடுப்பு பிரிவினரிடம் திருக்கோயிலில் (வரதராஜப் பெருமாள்) தங்கபல்லி மாயமானதாகவும், கோயிலில் உள்ள தங்கம், வெள்ளியிலான பல்லி சிலைகளை கோவில் நிர்வாகம் மாற்ற முயற்சிப்பதாக தெரிவித்த புகார் முற்றிலும் பொய்யானது.

பக்தர்களின் நலன் கருதி திருவாளர்கள் L&T நிறுவனம் மூலம் தற்காலிக மரப்படிக்கட்டுகள், நகரும் பாலம் முதலான அடிப்படைப் பணிகள் ரூ.76.90 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருவதால் இத்திருக்கோயிலில் உள்ள வெள்ளியிலான சிறிய பல்லியும், தங்க பல்லி என்று அழைக்கப்படும் பித்தளையாலான பெரிய பல்லியும் ஏற்கனவே பக்தர்களின் தரிசனத்திற்கு இருந்த இடத்திற்கு அருகிலேயே அமைக்கப்பட்டுள்ளது.

எனவே, ரங்கராஜன் நரசிம்மன் என்பவரால் சிலைத் திருட்டுத் தடுப்பு பிரிவினரிடம் அளிக்கப்பட்ட பொய்யான புகார் மீது சட்டவிதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என காஞ்சிபுரம் மண்டல இணை ஆணையர் சி.குமரதுரை தெரிவித்துள்ளார்.

### சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும்

# குத்தம்பாக்கம் புறநகர் பேருந்து முனையத்தில் - பயணிகளுக்கான கூடுதல் வசதிகள்!

## துறை சார்ந்த அதிகாரிகளுடன் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் ஒருங்கிணைப்புக் கூட்டம்!

சென்னை, நவ. 7-

சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று (6.11.2025) உள்ள வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அலுவலகக் கூட்டரங்கில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு தலைமையில் திருவள்ளூர் மாவட்டம், குத்தம்பாக்கத்தில் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் புறநகர் பேருந்து முனையத்தின் இறுதிக் கட்டப் பணிகளின் தற்போதைய நிலை குறித்தும், பயணிகளுக்கு செய்யப்படவேண்டிய கூடுதல் வசதிகள் குறித்தும் துறைச் சார்ந்த அரசு உயர் அலுவலர்களுடன் ஒருங்கிணைப்புக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், ஆவடி காவல் கூடுதல் ஆணையாளர் (தலைமையிடம் மற்றும் போக்குவரத்து) திருமதி.கே.பவானீஸ்வரி, மாநகர போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் த.பிரபு சங்கர், கும்டா சிறப்பு அலுவலர் ஐ.ஜெயக்குமார், ஐ.ஆர்.டி.எஸ்., வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை இணைச் செயலாளர் திருமதி.கே.எம். சரயு, சென்னை குடிநீர் வடிகால் வாரிய செயல் இயக்குநர் கௌரவ் குமார், ஆவடி காவல் துணை ஆணையாளர் (போக்குவரத்து) சி.சங்கு, தேசிய நெடுஞ்சாலைத் துறை (NHAI) திட்ட இயக்குநர் திருமதி.எ.சாவித்திரி தேவி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் – நூல்"!

# கூட்டுறவுக்காகவே முதல் முறையாக இயற்றப்பட்ட "கூட்டுறவு கீதம்"

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் வெளியிட்டார்!

சென்னை, நவ.7-

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் தலைமையில் நேற்று (06.11.2025) தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தில், நடைபெற்ற "கூட்டுறவு கீதம்" வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில்கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன், முதல்முறையாக கூட்டுறவுக்காகவே இயற்றப்பட்டுள்ள "கூட்டுறவு கீதம்" பாடலை வெளியிட்டார்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலையாய திட்டமான "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்" நூலினை வெளியிட்டு, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள LED விளம்பர பலகையினை திறந்து வைத்தார்கள்.

பின்னர், கூட்டுறவு ஒன்றியங்கள் மூலமாக நடத்தப்படும் உறுப்பினர் விழிப்புணர்வு முகாம், இளைஞர் ஈர்ப்பு முகாம் மற்றும் கூட்டுறவு சேவைகள் குறித்து பொது மக்களிடம் எடுத்து செல்ல அனைத்து மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களுக்கு ரூ.29,76,108/ மதிப்பீட்டில் உறுப்பினர் கல்வித் திட்ட சாதனங்கள் வழங்கப்பட்டது.

மேலும், கருணை அடிப்படையில் 6 நபர்களுக்கு இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர், கட்டுநர் பணியிடங்களுக்கு பணிநியமன ஆணை வழங்கப்பட்டது.

இவ்விழாவில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசும் போது தெரிவிக்கையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய தலைமையிலான தமிழ்நாடு அரசின் கீழ் செயல்படும் கூட்டுறவுத்துறை, அனைத்து துறைகளுடன் இணைந்து செயல்படும் துறையாகவும், அனைத்து துறைகளை மக்களுடன் இணைக்கும் துறையாகவும் செயல்பட்டு வருகிறது.

கூட்டுறவின் மாண்பினையும், கூட்டுறவின் செயல்பாடுகளையும், கூட்டுறவும் மகத்துவத்தையும் விளக்கும் வகையில் இன்றைய தினம் "கூட்டுறவு கீதம்" உருவக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. தேசிய கீதம் எவ்வாறு நாட்டின் பெருமைகளை விளக்குகின்றதோ, அதேபோன்று "கூட்டுறவு கீதம்" முதல்முறையாக கூட்டுறவுக்காகவே இயற்றப்பட்டுள்ளது.

இன்றைய தினம் கூட்டுறவுத் துறைக்கு என்று "கூட்டுறவு கீதம்" இயற்றப்பட்டு கூட்டுறவுத்துறை அமைச்சர் என்ற முறையில் என்னால் வெளியிடப்பட்டதை எண்ணி பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இனிவரும் காலங்களில் கூட்டுறவுத்துறையின் அனைத்துநிகழ்ச்சிகளிலும் "கூட்டுறவு கீதம்" பயன்படுத்தப்படும்.

"கூட்டுறவு கீதம்" கூட்டுறவுத்துறையின் ஒரு அங்கமாக என்றைக்கும் நிலைத்து நிற்கும்.

"கூட்டுறவு கீதம்" உருவாக்க உறுதுணையாக இருந்த, கூட்டுறவுத்துறை முதன்மைச் செயலாளர் அவர்களுக்கும், கூட்டுறவு சங்க பதிவாளர் அவர்களுக்கும், சிறந்த கூட்டுறவு கீதம் பாடலை தேர்வு செய்த குழு தலைவர் தமிழ்கடல் தேவகோட்டை இராமநாதன் அவர்களுக்கும், கூட்டுறவு கீதத்தை எழுதிய ஆனந்த செல்வன் அவர்களுக்கும், கூட்டுறவு கீதத்திற்கு இசையமைத்து அழகாக இங்கு இசைத்த திரைப்பட இசை அமைப்பாளர் ஸ்ரீகாந்த் தேவா மற்றும் இசைக்குழுவினருக்கும், இதற்காக பாடுபட்ட அனைத்து துறை சார்ந்த அலுவலர்களுக்கும், எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் முனைவர் க.சொ.இரவிச்சந்திரன் வரவேற்புரை ஆற்றினார். நிகழ்ச்சியின் நிறைவாக இணைப்பதிவாளர் (நுகர்வோர் கூட்டுறவு) வெ.முரளிக்கண்ணன் நன்றியுரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியில் அரசு முதன்மை செயலாளர் கூட்டுறவு உணவு (மற்றும்) நுகர்வோர் பாதுகாப்புத்துறை சத்தியபிரதா சாகு, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் க.நந்தகுமார், கூட்டுறவுச் சங்கங்களின்கூடுதல்பதிவாளர்கள் மு.வீரப்பன், (நுகர்வோர் பணிகள்), பழனிவேலு, (நிதி மற்றும் திட்டமிடுதல்), சுப்பிரமணியன் (நிதி மற்றும் வங்கியியல்) ஆகியோர் கலந்து கொண்டனர்.




காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய கழக பாக முகவர்கள் செயல்வீரர்கள் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் கலந்துக்கொண்டு உரையாற்றினார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், ஒன்றிய பொறுப்பாளர் எம்.டி.லோகநாதன், ஒன்றிய குழு தலைவர் உதயா கருணாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



சென்னை கீழ்ப்பாக்கம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலகத்தில் நேற்று (06.11.2025) சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025–ஐ முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கூட்டுறவு பாடல்கள் தொகுப்பினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் சத்யபிரத சாரு, க.நந்தகுமார், மு. வீரப்பன், க.சொ.இரவிச்சந்திரன், ஸ்ரீகாந்த் தேவா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.